# 7 மன்னிப்பை அனுபவத்தில் காண்போம்

**மனுக்குலத்தில் காணப்படும் ஒரு இறை பண்பாக மன்னிப்பை நாம் குறிப்பிடலாம். இயேசு தனது வாழ்வில் முன்மாதிரியாகச் செயற்படுத்திய மன்னிப்பை இப்பாடத்தில் விளங்கிக்கொள்வோம்.**

***மத்தேயு* 6:12, 18:21-35, *எபேசியர்* 4:32**

காலை எழுந்து இரவு நித்திரைக்குச் செல்லும்வரை தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மனிதன் பாடுபடுகின்றான். அவ்வாறான வாழ்வில் தந்தை, தாய், பிள்ளைகள், உறவினர், சிநேகிதர், அன்பானவர் மட்டுமல்ல தன்னைக் குறித்தும் சிந்தித்துச் செயற்பட நேரமில்லாத நிலை காணப்படுகின்றது. அதிக போட்டி நிறைந்த சிக்கலான வாழ்வுப் பயணத்தில், மனித பெறுமதி அழிக்கப்பட்டு பிறரின் துன்ப துயரங்களில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பும் குறைவடைவதை அவதானிக்கலாம்.

மேற்படி அனைத்துக் காரணிகளிலும், மனிதன் சுகநல வசதிகளை நாடி அதன் பின்னால் ஓடி, துன்பங்களை எதிர்நோக்க விருப்பமற்றவனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இதனால் பொது நல வாழ்வுக்கு பதிலாக தனது இறுதி இலக்கை நல்ல வழியில் அல்லாது தீய வழியில் அடைவதற்கு முயற்சிப்பது கவலைக் குரியதாகும்.

சமூகத்தின் நற்பெறுமதிகள் நிலைத்திருக்கும்போது மாத்திரமே அச்சமூகம் நன்கு நிலைக்கும். அவ்வாறான பெறுமதிகளில் மிக முக்கியமான குணமாகக் கருதப்படுவது மன்னிப்பு வழங்குதல் ஆகும்.

**மன்னிப்பு → அன்பு → சமாதானம் → ஒற்றுமை → ஒருமைப்பாடு → சகவாழ்வு**

புகையிரதம் செயல்படுவதற்கு இயந்திரம் இயங்க வேண்டும். அப்போது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து பெட்டிகளும் இயங்க ஆரம்பிக்கின்றன. எரிபொருள் பாவனையுடன் புகையிரத செயற்பாடு ஆரம்பமாதல் போன்றதே 'மன்னிப்பு வழங்கல்' மற்றும் 'மன்னிப்புப் பெறுதல்' என்பனவற்றில் சமூகப் பெறுமதி உறுதிப்படுத்தப்படுகின்றது. புகையிரதப் பெட்டிகள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளது போன்று மன்னித்தலின் பெறுமதியும் தொடர்புடையது என்பதை நாம் விளங்கிக்கொள்வோம்.

இவ்வாறு நோக்கும்போது மனிதர் எப்போதும் தவறு செய்வதுபோல் மன்னித்தலும் அதற்கு ஒத்ததாக சமூகத்தில் உருவாக்கப்பட வேண்டிய விசேட பண்பாகும். மன்னிப்பு வழங்கல், மன்னிப்புப் பெறுதல் என்பன இயேசுவின் போதனை ஆகும். திருவிவிலியத்தில் மன்னிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 6:12**

இயேசு எமக்குக் கற்பித்த இறைவேண்டலில் 'மன்னிப்பு' குறித்த வார்த்தையைத் தியானிப்போம். ஒவ்வொரு மனிதனும் அன்பு, சமாதானம், ஒற்றுமை, ஒன்றிப்பு, சக வாழ்வு போன்றனவற்றுக்கு விருப்பம் காட்டுகின்றான். ஆனால் அவை நிலைப்பதற்கு தேவையான பிரதான கோட்பாடான மன்னிப்பு வழங்கலில் பின்னடைகின்றான்.

எமது இறைவேண்டுதலில் மன்னிப்பு வழங்கல் மற்றும் மன்னிப்புப் பெறுதல் என்பனவற்றின் பெறுமதியை தமது சீடர்களுக்கு இயேசு போதித்தார் என்பது இதில் தெளிவாகின்றது. மேற்படி வேண்டுதல் எமது குடும்ப விண்ணப்பமாக செய்யும் ஒவ்வொரு வேளையும் பிறர் குறித்த பொறுப்பு வெளிப்படுகின்றது. இதனால் கிறிஸ்தவராகிய நாம் இறைவேண்டலைக் கூறுவது மட்டுமல்ல அதனைக் கூறுவதற்கு முன்னர் மன்னிப்பு உண்மையிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளதா என்று தேடிப்பார்த்தல் அவசியம்.

இயேசு 'மன்னிப்பு' தொடர்பாக போதித்தது மட்டுமல்ல அதைத் தமது செயலிலும் காட்டினார். சிலுவையில் தமக்கு எதிராக தவறு செய்தவர்களுக்கு மன்னிப்பு அளித்தார். இயேசுவின் பிரதான சீடரான பேதுரு தமக்கு எதிராக குற்றம் செய்த சகோதரனை யூத முறைப்படி ஏழு தடவை மட்டும் மன்னிக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார் என நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 18:21-22**

இயேசு எதிர்பார்த்த மன்னிப்பானது ஏழுமுறை மன்னித்தல் மட்டுமல்ல, அது எல்லையற்றது. இதனை நடைமுறைப்படுத்துவது கடினம். உண்மையிலேயே மன்னிப்பு வழங்கல் என்பதன் பொருளை விளங்கிக்கொள்ள வேண்டுமானால் எமக்கு எதிராக குற்றம் செய்யும் அனைவரையும் நாம் மன்னிக்க வேண்டும். இயேசுவின் போதனைக்கு ஏற்ப எமது வாழ்வை நாம் பழக்கப்படுத்தி செயற்படுவோம்.

## இரண்டம் ஜூவாம் பவுல்



இவர் 1920 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாளன்று போலந்து நகரில் பிறந்தார். வாழ்வில் குரோதம் மற்றும் பகைமை போன்றனவற்றுக்கு மன்னிப்பை தானமாக வழங்கிய பெரியோர்களை நாம் நினைவு கூரும்போது, மன்னிப்பு வழங்கும் உத்தம செயற்பாட்டை தமது வாழ்நாள் முழுவதும் எடுத்துக்காட்டியவர் இரண்டாம் ஜூவாம் பவுல். 1981 மே 13 இல் துருக்கி இன அலி அக்கார் என்பவரின் வெடிகுண்டினால் இவர் தாக்கப்பட்டார். ஆனால் இலக்கு தவறியது. அவ்வேளையில் இரண்டாம் ஜூவாம் பவுல் அவர்கள் பிரதி செயலாக அலி அக்னார் இருந்த சிறைக்கு சென்று ''நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன்'' என்று கூறி அவருக்கு மன்னிப்பு வழங்கினார்.

## அருட்பணி. பீற்றர் ஜெராட் டீ சில்வா



மன்னிப்பு வழங்கி பணி ஆற்றிய இலங்கையின் திருப்பணி யாளர் அருட்பணி. பீற்றர் ஜெராட் டீ சில்வா ஆவார். 1840 இல் மெதடிஸ்த திருஅவையைச் சேர்ந்த அருட்பணி. பீற்றர் ஜெராட் டீ சில்வா அவர்கள், அங்குலான பிரதேசத்தில் நடாத்திய நற்செய்திப் புரட்சி குறிப்பிடப்படவேண்டிய ஒன் றாகும். கிராமத்து மக்கள் அவர் போதித்த நற்செய்தியை மிக விருப்புடன் கேட்ட அதேவேளை எதிர்ப்பும் தெரிவித்தனர். ஒருநாள் அவர் வழமைப்படி அங்குலான செல்லும்போது, வழியில் மது விற்பனை நிலையத்துக்கு அருகே சிலர் ஒளிந்து நின்று அவர்மீது சாணத்தை வீச ஆயத்தமாக இருந்தனர். அவர் அன்று சற்று தாமதமாகி வந்தார். வழியில் வந்த நபரை இவரென நினைத்து அவர்கள் சாணத்தை வீசி எறிந்தனர். குதிரையை ஓட்டி வந்தவர் அதனால் கோபமடைந்து அவர்களை தாக்கினார். குதிரையும் கூட அவர்களைத் தாக்கியது. குதிரையில் பயணம் செய்தவரோ ஆங்கிலேயரான பாணந்துறை நீதிபதி ஆவர். தாக்கியவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனை அறிந்த பீற்றர் ஜெராட் சிறைக்குச் சென்று அவர்களுடன் உரையாடினார். அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார். அவர்கள் சி றையிலிருந்து விடுதலை பெற்றவுடன் மெதடிஸ்தர்களாக மாறினர்.

மன்னிப்பு வழங்கல் எனும் சிறப்பான பண்பை உலகுக்கு வெளிப்படுத்தியவர் எதுவித குற்றமும் செய்யாத இயேசு என்பது மறுக்க முடியாது.

மனிதன் இறைவனிடமிருந்து தூர விலகிச் செல்லும்போது பாவத்தை முழு வதுமாக நீக்கி இறைவனுடன் தொடர்பு கொள்ளும் உன்னத செயலானது மன்னிப்பின்

மூலமாக; சிலுவைத் தியாக பலியால் நிறைவு பெற்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் குற்றங்களுக்காக மனம்திரும்பி புதுவாழ்வு வாழமுடியும் என திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

குற்றங்களுக்கு மன்னிப்பு பெற்றும் மன்னிப்பு வழங்கியும் ஒருவருக்கொருவர் இதுவரை காணப்படாத விசுவாசத் தன்மையைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் உண்டு. மன்னிப்பு வழங்கல் மற்றும் மன்னிப்புப் பெறுதல் இறையரசின் உத்தம பண்பாகும் என்பது வெளிப்படுகின்றது.

மன்னிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் இயேசு போதித்த உவமையில் எமது கண்ணோட்டத்தைச் செலுத்துவோம்.

### மன்னிக்க மறுத்த பணியாள் உவமை

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 18:21-35**

- அதிக கடன்பெற்ற பணியாள் தனது கடனை மன்னிக்குமாறு தலைவரிடம் வேண்டினார்.
- தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.
- மன்னிப்பைப் பெற்ற பணியாளர் தன்னிடம் கடன் பெற்றவரிடம் கடனை திருப்பித் தரும் வரையில் அவனைச் சிறையில் அடைத்தார்.
- தலைவர் சினமடைந்து அவருக்கு தண்டனை வழங்கினார்.

**மேற்படி உவமையில் எமக்குக் கிடைக்கும் முன்மாதிரிகள்**

- மன்னிப்பு வழங்கி செயற்பட வேண்டும்
- மன்னிப்பு வழங்குதல் இறைபண்பாகும்
- மன்னிப்புக் கேட்டல் தவறு அல்ல
- மன்னிப்பு அனைவருக்கும் அவசியம்
- மன்னிப்பு வழங்குதல் - மன்னிப்புப் பெறுதல் ஆகிய செயல்களில் நாம் இறைவிருப்பத்தை நிறை வேற்றுகின்றோம்
- மன்னிப்பு வழங்குதல் - மன்னிப்பு பெறுதல் மூலமாக புதுவாழ்வு உருவாகின்றது.

இறைவன் இயேசு எமக்கு அளித்த மன்னிப்பை கிறிஸ்தவராகிய நாம் எமது சமூகத்துக்கும் நாட்டுக்கும் வழங்குவோம். மன்னிப்பு வழங்கவும் மன்னிப்பைப் பெற்று வாழவும் பழகுவோம்.

**செயற்பாடு**

01. மன்னிப்பு வழங்குதல் தொடர்பாக இயேசுவின் முன்மாதிரிகள் யாவை?

02. கிறிஸ்தவ பிள்ளை என்ற வகையில் உமது வாழ்வில் மன்னிப்பு வழங்குதல் - மன்னிப்பு பெறுதல் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் மூன்று குறிப்பிடுக.